2. வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினா எண் 299, டாக்டர் வெ. சரோஜா, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

299—

கைதிகளின் தண்டனைக் காலத்தைக் குறைத்தல்

* 4404 டாக்டர் வெ. சரோஜா :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிறையில் இருக்கும் கைதிகளுக்கு அவர்களின் நன்னடத்தையின் காரணமாக மதிப்பெண் கொடுத்து தண்டனையைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுத்த முடிவு என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சிறையிலிருக்கும் கைதிகளுக்கு அவர்களின் நன்னடத்தையின் காரணமாக தண்டனையைக் குறைப்பது பற்றிய விதிகள் ஏற்கனவே சிறை நடைமுறை நூலில் (Jail Manual) குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் வெ. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதனால் பயனடைந்த பெண் கைதிகள் பற்றிய முழு விவரங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரங்கள் என்னிடத்தில் இல்லை. ஆனால் அண்மையில் போற்றுதலுக்குரிய நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பிறந்த தினத்தின்போது பெண் ஆயுள் கைதிகளுக்கு விடுதலை அளிக்கப்பட்டது. இதுவரையில் 10 ஆண்டுகள் முழுமையாக சிறைத் தண்டனை கழித்த அனைத்துப் பெண் கைதிகளையும் கடந்த 24—2—1992 அன்று போற்றுதலுக்குரிய நம்முடைய முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த

நாளை ஒட்டியும், இந்த அரசு உருவானதை ஒட்டியும், மனித நேய அடிப்படையில் 10 ஆண்டுகள் முழுமையாக சிறைத் தண்டனை அனுபவித்த பெண் ஆயுள் கைதிகள் அனைவருமே விடுதலை செய்யப்பட்டுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே. ஆர். முருகானந்தம்.

திரு. கே. ஆர். முருகானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மதிப்பெண்கள் நன்னடத்தையின் அடிப்படையில் போடப்படுகிறபோது, அங்கே யார், யார் இருந்து எப்படி இந்த மதிப்பெண்கள் எந்தவகை நன்னடத்தையிலே கணக்கெடுக்கப்படுகிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சிறை நடைமுறை நூல், ஜெயில் மேனுவலில் தொகுதி-2, விதி எண் 317-இன்படி 3 மாதங்கள் அல்லது 90 நாட்களும் அதற்கு மேலும் தண்டனை அடைந்த ஒவ்வொரு சிறைவாசிக்கும், சிறையுள் அவர்களுடைய நன்னடத்தைக்காக மாதம் இரண்டு நாட்கள் வீதம் குறைக்கப் படுகிறது. சிறையில் அவர்கள் செய்யும் பணிக்கென இரண்டு நாட்களும் ஆக மொத்தம் மாதத்திற்கு 4 நாட்கள் வீதம் தண்டனை குறைப்பு வழங்கப்படுகிறது. சிறையில் சமையல், பெருக்குதல் போன்ற பணிகளில் ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் பணிபுரியும் சிறைவாசிகளுக்குக் கூடுதலாக காலாண்டுக்கு 3 நாட்கள் வீதம் தண்டனைக் குறைப்பு வழங்கப் படுகிறது. மேலும் ஒவ்வொரு ஆண்டு முழுவதும் சிறைக் குற்றம் எதுவும் புரியாமல் ஒழுங்காக இருப்பவர்களுக்கு ஆண்டுக்கு 15 நாட்கள் கூடுதலான தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. மேற்படி சிறை நடைமுறை விதி நூல் தொகுதி-2, விதி எண் 317-இன்படி சிறைவாசிக் காவலர்களுக்கு, கான்விக்ட் வார்டன்—ஸுக்கு மாதத்திற்கு 8 நாட்கள் வீதமும், சிறைவாசி மேற்பார்வையாளர்களுக்கு, கான்விக்ட் ஓவர்சீயர்ஸ்-க்கு 6 நாட்கள் வீதமும், சிறைவாசி இரவுக் காவலர்களுக்கு, கான்விக்ட் நைட் வாட்ச்மேன்களுக்கு, 5 நாட்கள் வீதமும் பிரதி மாதம் தண்டனைக் குறைப்பு வழங்கப்படுகிறது. இவை தவிர மேற்படி சிறை நடைமுறை நூல் விதி எண் 325-இன்படி மேற்குறிப்பிட்டுள்ள தண்டனைக் குறைப்பைத் தவிர, ஆண்டுக்கு ஒரு முறை கீழே குறிப்பிட்டுள்ள 7 சிறப்புக் காரணங்களுக்காக சிறை கண்காணிப்பாளரால் 30 நாட்கள் சிறப்புத் தண்டனைக் குறைப்பும் சிறைத் தலைவர் அல்லது அரசால் 60 நட்களுக்கு மேற்படாமல் சிறைத் தண்டனை குறைக்கப்படுகிறது

[1992 மார்ச் 23

(1) சிறையில் ஒழுங்கு மற்றும் விதிமுறைகளைப் பேணுவதற்கு சிறை நிர்வாகத்திற்கு உறுதுணை புரிதல்.

(2) கைவினை கற்பதில் தேர்ச்சி.

(3) உற்பத்தியில் அதிக முன்னேற்றம்.

(4) சிறை அலுவலர்கள் தாக்கப்படாமல் பாதுகாத்தல்.

(5) சிறையில் தீ பிடித்தல் போன்ற அவசர காலங்களில் உதவி புரிதல்.

(6) கல்விப் பட்டங்கள் அல்லது அரசினால் அங்கீகரிக்கப் பெற்ற தொழில் கல்விகளில் தேர்ச்சி பெறுதல்.

(7) துணிகள் அணிவது போன்றவற்றில் சிக்கனம்.

மேற்கண்டவாறு வழங்கப்படும் மொத்த தண்டனைக் குறைப்பு சிறைவாசிகளின் மொத்த தண்டனையில் கால் பகுதிக்கு மிகைப்படாமல் இருத்தல் வேண்டுமென்பது சட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்,

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொலைக் குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்கள் தமிழகத்திலே 14 ஆண்டுக்காலம் சிறையில் இருந்தால்தான் அது ஆயுள் தண்டனையாகக் கணக்கிடப்படுகிறது. அப்படி இருக்கிறபொழுது நாளுக்கு நாள் குற்றங்கள் பெருகி வருகிற இந்தச் சமுதாயத்தில் 14 ஆண்டுக்காலம் சிறையிலே இருக்க வேண்டியவர்களை 10 ஆண்டுக் காலம் முடிந்த பிறகு விட்டு விடுவது என்பதை விட முதலமைச்சர் போன்ற நல்லவர்களுடைய பிறந்த நாள் விழாக்களில் ஓராண்டு மட்டுமே குறைப்பு செய்வதற்காக அரசு வழிவகை செய்யுமா என்று மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேசவத் தலைவர் பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு வழக்கறிஞர், அவர்களுக்குத் தெரியும். அண்மையிலே, சுப்ரிம் கோர்ட்டிலே மனுராம் என்ற ஒருவர் வழக்குப் போட்டு 14 ஆண்டுகள் அவர்கள் இருந்தே ஆகவேண்டும். குறிப்பாக இரண்டு குற்றங்களுக்காக அதாவது டெத் சென்டன்ஸ் கொடுத்து அவைகளில் ஆயுள்சிறைவாசிகளாக ஆகின்ற குற்றவாளிகளை 14 ஆண்டுக்காலம் நிச்சயமாக வைத்திருக்க வேண்டுமென்று ஜஸ்டிஸ் வி. ஆர். கிருஷ்ணய்யர் அவர்கள் சுப்ரிம் கோர்ட்டிலே ஒரு தீர்ப்பு அளித்ததன் காரணமாக, 14 ஆண்டுகள் அந்த

1992 மார்ச் 23]

ஆயுள் சிறைவாசிகளை, டெத் சென்டன்ஸ் கொடுத்து அவைகளில் லைப் சென்டன்ஸ்ஸாக மாறியவர்கள்; அதே போல் வேறு காரணத்திற்காக டெத் சென்டன்ஸ், பெற்றவர்கள் இந்த இரண்டு வகையினரைத் தவிர மற்றவர்களுக்கு அரசியல் சட்டத்திலே கவர்னரும் முதலமைச்சரும் சேர்ந்து மன்னிப்பு கொடுக்கலாம் என்று விதி இருக்கிறது. அதன்படிதான் போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய பிறந்த தினத்தின்போது 12 ஆண்டுகள் முடிந்த ஆண்கள்; 10 ஆண்டுகள் முடிந்த பெண்கள் கைதிகளுக்கு அன்றைக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டு, அவர்கள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மு. நடேசன்.

திரு. மு. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னடத்தை காரணமாக விடுதலையாகும் கைதிகளுக்கு நம்முடைய அரசின் சார்பாக தொழில் தொடங்குவதற்கு, அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறையிலிருந்து வெளியே வருபவர்களுக்கு அவர்கள் தொழில் செய்ய உதவ போதுமான பாதுகாப்புகளெல்லாம் கொடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 300, திரு டி. சுதர்சனம், இருக்கையில் இல்லை.

வினா எண். 301, திரு. எம். பூராசாமி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

301—

பூம்புகார் தொகுதியில் தொழில் நுட்பக் கல்லூரி.

*3295 திரு. எம். பூராசாமி :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பூம்புகார் தொகுதியில் தொழில் நுட்பக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா ?

(ஆ) ஆம், எனில், விரைவில் துவங்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?